01. படைப்பின் கரமே (காணிக்கைப்பாடல்)

இயல்: முனைவர் சேவியர்

இசை: திரு.ஜெயின் ரொசாரியோ

பாடியவர்:அஜிதா மகிளன்

இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

படைப்பின் கரமே பரம்பொருளே
படைக்கும் பொருளை ஏற்றருளே
காணும் யாவும் உமதன்றோ
காணிக்கை தந்தோம் எமையன்றோ.

சரணம்

1. அருளினை வழங்கிய
   இறைவா உமக்குப் பொருளினை
   தருதல் பொருத்தமில்லை
   உயிரினை வழங்கிய
   இறைவா உமக்கு தந்திட
   எதுவும் உலகிலில்லை
   இதயம் தந்தீர் அதையே உமக்கு
   தூய்மையாய் மாற்றித் தருகின்றேன். (2)

2. கருணையின் வடிவமே
   இறைவா உமக்கு இணையென
   என்னில் எதுவுமில்லை
   விண்ணக மகிமையே
   இறைவா எமக்கு மறுமையை
   தந்தால் வெறுமையில்லை
   வாழ்வைத் தந்தீர் அதையே உமக்கு
   ஏற்றதாய் மாற்றித் தருகின்றேன். (2)

This song is prepared by **Iniya Ithayangal Whatsapp group** and linked in **[www.manavai.com](http://www.manavai.com)**
**(Easter 2021)**